தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 மே 6.

சித்திரை 24, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

‘‘ குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் ’’

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில் ; பழி அன்று.

I. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 987 முதல் 990 வரை மாண்புமிகு நிதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கோரிக்கைகள்.

*வினா எண் 991—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்கலம் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் 5 அம்ச கோரிக்கை வைத்து போராடி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அவர்கள் கோரிக்கைகள் என்ன ?

(இ) அவைகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) (1) உடற்பயிற்சி ஆசிரியரின் பற்றாக் குறை நிவர்த்தி செய்திடுதல் ;

(2) கழிவறை வேண்டுதல்;

(3) பள்ளிக் கட்டட வசதியும், இருக்கை வசதியும்;

(4) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தங்கும் விடுதி வசதி ;

(5) மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றாக் குறையைப் பூர்த்தி செய்தல்.

(இ) கோரிக்கைகள் 1 மற்றும் 2-ல் கேட்டுள்ளபடி, இப் பள்ளிக்கு கூடுதல் உடற் பயிற்சி ஆசிரியர் பணியிடம் அனுமதிக் கக்கோரியும், கழிவறை கட்டுவதற்கும் மாவட்டக் கல்வி அலு வலர் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும் கோரிக்கைகள் 3 மற்றும் 4-ல் கேட்டுள்ளபடி, பள்ளிக்குரிய கட்டடங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவை வருங்காலத்தில் ஏற்படுத்தித் தரப்படுமென உறுதி அளிக்கப் பட்டது. கோரிக்கை 5-ல் கேட்டுள்ள மேல்நிலைப் பள்ளி ஆசிரி யர்களில் கணிதப்பாட ஆசிரியர் பணியிடம் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் முதல் நிரப்பப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கூடமானது திருப்பாலைக்குடி கடற்கரை ஓரத் திலே மிகவும் பிற்பட்ட பகுதியிலே இருக்கிறது. அந்தப் பள்ளி யிலே நீண்ட நாளாக கோரிக்கை வைக்கப்பட்டும், 5 அம்சக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண் டதன் அடிப்படையிலே, அரசாங்கம் ஓரளவு நடவடிக்கை எடுத்து, இன்றைக்குக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத் திலே அந்தப் பள்ளியை பிளஸ் 2 பள்ளியாக்க வேண்டிய ஏற் பாடும் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலை வர் அவர்களே, அந்தப் பள்ளி மாணவர்களது கோரிக்கையே, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதி, மற்றும் மேநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்தல் என்பவையாதலால், இப்பொழுதே அது மேநிலைப் பள்ளியாகத் தானிருக்கிறது.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்கும் திட்டம்

* வினா எண். 992—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்நத குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்க எடுத்துள்ள நடவடிக்கைகளில் முக்கியமானவை; பள்ளிகளில் இலவசப் படிப்பு; நண்பகல் உணவுத் திட்டம்; இலவசமாகப் பாட புத்தகங்கள் வழங்குதல்; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் பிற்பட்டோருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலமும். பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் பல சலுகைகள் வழங்கு தல் ஆகியவையாகும்.